உ

சிவமயம்.

"துறவி"

1955

மன்மத மலர் 1	திங்கள் வெளியீடு.	கார்த்திகை இதழ் 11

துறவி

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,

திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர் :

சுவாமி சொருபானந்தா

ஆண்டுக் கட்டணம் ரூ 2/-   தனி இதழ் அணா 3/-

ஓம்.

" துறவி "

பொருளடக்கம்.

ஓம்.

"துறவி"

மன்மத மலர் 1	தமிழ் திங்கள் வெளியீடு.	கார்த்திகை இதழ் 11

கடவுள் வாழ்த்து.

வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும் பரமன் உரைகோயில்
முந்தியெழுந்த முழவின்ஓசை முதுகல் வரைகண்மேல்
அந்திப் பிறைவந் தணையுஞ்சாரல் அண்ணுமலையாரே—சம்பந்தர்.

அறிவைவிடத் தோன்றிடா "தம்புவியு நெஞ்சுஞ்
செறியறிவாய் நில்லென்று செப்பி—பிறிவறவென்
னெஞ்சைத் திருத்தி நிறையவைத்த போரூரன்
கஞ்சத் திருத்தண்டைக் கால்.

அறம்.

நாம் ஒவ்வொருவரும் நாள் தோறும் மறவாது அறம் செய்ய வேண்டும். இறை வழிபாட்டோடு அவரவர்கட்கியன்றளவில் நொய்யிற் பிளவளவேனும் பகிர்ந்து கொடுத்துதவுதல் வேண்டும்.

அறத்தைப் பலதிறத்தாலும் ஆற்றிவந்தனர் நம் மக்கள். அவ்வாறில்லையாயின் நம் தமிழகத்தே கோவில், மடம், அன்னசத்திரம், மருத்துவச் சாலை, குளம், கிணறு, தோப்பு முதலிய அளப்பிலா அறச்சாலைகளும், தவச்சாலைகளும் நிலைபெற்றிராது.

அறப்பணியும் நாட்டுக்கேற்ப, காலத்துக்கேற்ப இயற்றுதல் அறிவுடைமை. எல்லா அறங்களும் நன்மை பயக்கக் கூடியவையாய் இருப்பினும் இன்றைக்கு வேண்டுவது சமய நல்லொழுக்கத்திலே நாட்டு மக்களை நிலைபெறச் செய்தல் ஒன்றேயாம். இவை முற்றுப் பெறின் இறைவழிபாடும், வருவாய்க்குத்தக்க வாழ்க்கையும், மருத்துவச் செலவின்றி உடல் வலிமையும், உள்ளும் புறமும் தூய்மையும் உடையவர்களாகத் திகழ்வது திண்ணம். இதைச் சிந்தித்தே நம் சைவமடங்கள் ஆவன செய்து வருகின்றது இவை போற்றற்குரியனவாம்.

நீங்கள் இவைகளில் ஒவ்வொன் றேனும் செய்கின்றீர்களா ?

மனத்தாற் செய்வன.

(1) ஒன்றையும் சுட்டிப் பாவிக்காமல் பாவனை தீதமாய் நிற்றல்
(இஃதியலாதாயின்)

(2) அணு திரணம் காஷ்டம் முதலிய எவற்றினும் குறைவு படாது விரிந்த பரிபூரண பாவனையைக் கருதி நிற்றல்
(இதுவும் இயலாதாயின்)

(3) உலகம் முழுவதும் கறைமிடற்றண்ணலாம் சிவபெருமானது அட்டமங்கள மூர்த்தம் என்று ஏகபாவனை செய்து நிற்றல்
(இதுவும் அரியதாயின்)

(4) தமக்கு உண்மைப் பொருள் உணர்த்தவந்த ஆசாரியமூர்த்தியை இடைவிடாது நினைந்து நிற்றல்.

வாக்காற் செய்வன.

(1) ஒருரையும் கூறுது வாக்கினை மௌனம் செய்தல்.
(இவ்வாறிருக்க இயலாதாயின்)

(2) விநோதத்தாலாயினும் ஒரு பொய்யையும் கூறுது உண்மையே சொல்லுதல் இங்கே பொய்மை வாய்மை என்பன முறையே தீமையும் நன்மையும் தரும் சொற்களாம். இதனை
"பொய்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" —என்பதனாற்கொள்க.

காயத்தாற் செய்வன.

(1) சித்திரத்தில் எழுதிவைக்கப்பட்ட தீபம்போல ஞானசமாதியில் அசைவின்றி ஆதனம் கட்டும் இலக்கணத்தோடு பொருந்த வைத்தல்.
(இஃதியலாதாயின்)

(2) குருமூர்த்தியினது அரிய ஏவற்பணி விடைகளை இயற்றி நிற்றல்.
(இதற்கு வாய்ப்பில்லையாயின்)

(3) முடை நாற்றம் பொருந்திய தன்னுடற்கு இதஞ்செய்வதை விட்டுச் சராசரமாயுள்ள உயிர்கள் எல்லாவற்றுக்கும் மிக்க இனிமை பயக்குஞ் செயலைச் செய்தல்.

அவிரோத வுந்தியார்.

தவத்திரு. சுவாமி முக்தானந்தா அவர்கள்
(சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.)

முன் (ம 1 இ 10 ப 139) தொடர்ச்சி.

மனிதன துடலும், இவ்வியல்பிற்கு வேருகாமையால் ஐம்பூதங்களின் கூட்டுறவே. இதில் எவ்வெப்பூதங்களின் கூறுகள் என்னுடைய வென்பனவாக அமைந்துள்ளன; வென்று அறிதற் குறியவே. (1) எலும்பிறைச்சி, நரம்பு தோல், இழி மயிர், மண்ணின் கூறு, (2) நீர் நிணம், கொழுப்பு மூளை, சோரி கரு, நீரின் கூறு. (3) சோம்பல் மறதி, தூக்கம், பசி, கலவி, இவை நெருப்பின் கூறு. (4) ஏற்றல் இடுதல், இருத்தல் நிமிர்தல், ஓடலுரைத்தல், காற்றின் கூறு. (5) இடாமை, பொருமை, அவா, வெகுளி, வெட்கம், விண்ணின் கூறு. இவற்றின் கூட்டுறவாக அமைந்த இதனை உடம்பென அழைக்கின்ருேம். இது, இயங்கும் உரிமை அற்றது. சேர்க்கையாதலின், நிலையாதது மாகும், சிதைவதே திண்ணமாதலால்.

இத்தகையதான இவ்வுடம்பு, தானென்று எண்ணுதற்கோ? இசைத்தற்கோ? எங்ஙனம் உரியதாகும்; ஆகாது. இதனைத் தானென்று கொள்ளுதல், அறியாமை அஃதாவது ஒன்றை மற்ருென்ருய்க் கொள்ளுவதுஞ் சொல்லுவது மாதலால், இது மயக்கம்.

எனவென்பவோ? புலன்கள், பொறிகளின் வழிய வாய்ச் சென்று பற்று மிடங்களாம்.

புலன்களென்பவை, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் இவற்ருற் பற்றப் படுபவையோ? இடம் பொருள் ஏவல்களே. இவை எவ்வகையிலும், தன்ைேடு இயைபில்லாதவை. இவற்றில்; என் பொருளென்று பற்றுவைத்து, அழுந்தி, அலமறுகின்ருன். இஃதும் மயக்கமே யாகும். இந்த என வெனும் மயக்கம் பற்ருவண்ணம் விட்டு விலகியவனே உண்மை யுணர்தற் குரியவனுவான்; என்பனவற்றை, அவிரோத வுந்தியார் பிரித்து அறிவுறுத்துகின்றது காண்பாம்.

(11) அ. உந்தியார் :—

தேகாதி நான்கனுட் டேக கரணங்கள்
ஆகுமி யானென்ப துந்தீ பற
அலமற் றெனதென்ப துந்தீ பற

பொருள்:—'தேகாதி நான்கனுள்'=(உயிர்கட்கு, மாயையினு லுண்டாகிய) உடல், கருவி, இடம், நுகர்வு என்ற நான்கனுள் 'தேககரணங்கள்'=உடம்பும், கருவிகளும், 'யானெனென்பவாகும்'= (அறியாமையால்) யான் என்று சொல்லப்படுவவாகும். 'மற்று'= இன்னும், 'அல'=இவையல்லாதனவான (இடமும் நுகர்வும்) 'என தென்பது'=என்னுடைய வென்று சொல்லப்படுவது வாகும் என்று கூறிக் கொண்டே, உந்திப்பறவுங்கள், சிறுமிகாள்! உந்திப் பறவுங்கள் (என்பதாம்)

குறிப்பு:— கருவி என்றதால், உட்கருவி, புறக்கருவிகளைக் கொள்ளுதல் வேண்டும்.—இடமென்றமையால், நிலம், மலை, முதலிய உலகு கொள்ளத்தக்கது—நுகர் வென்பது, சுவை முதலியவை— இவற்றுள் கருவி, உடம்பின் வேறுகாமையால், பொதுவாக உடம் பெனப்படும்—இடம் நுகர்வின் வேறலாமையால், பொதுவில் நுகர் வெனப்படும். உடம்பை யானென்பதும், நுகர்வை எனதென்பதும், அறியாமையாம்.

காயத்தையுங் கருவிகளையும்

யானெனக் கொள்ளல் மயக்கமெனல்.

உடலுங் கருவிகளும், பருப்பொருளா யுள்ளவை. இவற்றின் தன்மையோ? கண் கூடாய்த் தோன்றுவதும், முதிர்ந்து, தளர்ந்து குறைந்து மறைந்து, ஒழிவதுமே யாகும், இவ்வியல் பினவாய இது; நானல்ல வென்பதனைத் தெளிவிக்கக் கருதிய துற விறைவர், பட்- டினத்தடிகளார் "ஒடு விழுந்து சீப்பாயும் ஒன்பது வாய் புண்" என்று இதன் இழிவை வெளிப்படுத்தியதும்.

அன்பிறைவர் வாதவூரடிகள், "பொத்தையூன் சுவர் புழுப் பொதிந்து உளுத்து அசும் பொழுகிய பொய்க் கூரை" என இதனது பொய்மையுடன் அறிவின்மையையும் தெரிவித்து, இது மெய்யென்று கொள்ளக் கூடாதது இதனை மெய்யெனக் கொள்ளின், இடர்க் கடலின் சுழியில் அகப்பட்டு உழலுதல் வேண்டும் என்பதைத் தன் செயல் மேல் வைத்து, உலகினர்க் குணர்த்திய தூஉம் காணின்; இவ்வுடம்பு மெய்யென்றே நானென்றே கொள்ளுதற்கு உரிய தன்று.

அங்ஙனங் கொள்ளின் "பொருளல்ல வற்றைப் பொருளென் றுணர்வதான மருளாகும்"; அதனால் மீண்டும் மாளும் பிறப்பு உள தாகும் என்பது திண்ணம்.

இன்னுமிது, "முன்னை வினையால் வந்தது, இன்னும் வினை விளையும் இடமாயுள்ளது, புனை வனவாகிய மணங்கமழ் பூச்சுகளும் உடைகளும் நீங்கிவிடில், புலாலைப் புறத்தே வெளியிடுவது. முப்

படைந்து விளி வெய்துவது, தீப்பிணிகள் குடியிருக்கும் வீடு, பற்றனைத்தும் பற்றி நிற்கும் இடம், குற்றங்களனைத்தையும் நிரம்பக் கொண்டுள்ள தோணி, பாம்படங்கியுள்ள புற்றைப் போன்று சினம் படுத்திருக்கும் அரை, கேடும், கவலையும், துன்பமும் இரக்கமும்; நீங்காத உள்ளத்தைத் தன்னிடத்து வைத்துக் கொண்டிருப்பது, மக்கள் யாக்கை இது''; என யாக்கையின் இழி தகைமையை, **மணி மேகலையின்** அறிவுரையாக, **சாத்தனூர்** கூறியுள்ள வண்ணமுங்காணின் இவ்வுடம்பு கருவிகளை, யானெனக் கொள்ளுதல் எள்ளளவேனும் அமையாது.

மேலும் இவ்வுடலுங் கருவியும் அறிவிலவாய், அழிவனவாய் உள்ளவை.

யான் எனும் ஆன்மாவோ? **''அணுத்தருந் தன்மையிலையோன் காண்க''** என்றபடி, நுண்மையினும் நுண்மையது, அறிவிற் கறிவா யுள்ளது, அழிவில்லது.

இவ்விரு வகையும், இயல்பாலுங் காட்சியாலும் முற்றும் முரண் பட்டவையா யிருக்க, உயிர்கட்கு, இவற்றில் ஒற்றுமை மயக்க முண்டாவ தெங்ஙன மென்னில்; ஓதுகின்றது அவிரோத வுந்தியார்.

அ. உந்தியார் :—

அழிதேக மன்னுயிர்க் கன்னிய மேயேனும்
பழமோகத் தால்யானென் றுந்தீ பற
பற்றுமை யொற்றுமை யுந்தீ பற (என)

பொழிப்பு :—மன்னுயிர்க்கு, அழிதேகம் அன்னியமே யேனும் யானென்ற ஒற்றுமை, பழமோகத்தால் (வந்த) பற்றுமை (ஆம்)

பொருள் :— 'மன்னுயிர்க்கு'—(படைப்புத் தொடங்கி) நிலை பெற்றுள்ள உயிர்கட்கு, 'அழிதேகம்'—அழிந்து படுவதே இயல்பா யுள்ள உடம்பு, 'அந்நியமே யேனும்'—முரண்பட்ட வேற்றியல் பின தேயானாலும், 'யான் என்ற'—(வேற்றுமை யின்றி) தான் என்று கொள்ளுகின்ற, 'ஒற்றுமை'—ஒன்றெனுந் தன்மையானது, 'பழமோகத்தால்'—(உயிர்களிடத்து) முன்னரே படிந்து கிடக்கும் அறியாமையின் கூட்டுறவால், (உண்டாய) 'பற்றுமை'—அழுந்திய பிடியேயாகும். என்று பாடிக் கொண்டே உந்திப் பறவுங்கள். சிறுமியர்காள் உந்திப் பறவுங்கள்.

இங்ஙனம்; உயர்வு தாழ்வு, நிலையுடைமை நிலையாமை அறிவு அறியாமை, இவற்றைப் பிரித்துணராமையே மருள். பிரித்து மெய்யை மெய்யென்றுணர்வதவே மாசறு காட்சி, இப்படிப்பட்ட குற்ற மற்ற மெய்ப் பொருட் காட்சி கைவரப் பெற்ற மகனே அறியாமை யென்னும் இருள் நீக்கம் பெற்று, இன்ப மெய்தப் பெறுவான் என்பதை முன்னர்க் கூறிய திருவுந்தியார் குறிப்பா யுணர்த்தியுள்ளது தெளிவோமாக.

எடுத்துக் காட்டு :—

திருக்குறள் ;—

"பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு". (எ. ம்)

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (எ. ம்)

(தொடரும்)

குறிப்பு.

"*துறவி*" என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எ ழு த் து க் க ளை நன்கு தெரிந்து கொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரேபக்கத்தில் எழுதி ஒவ்வொறு தமிழ் மாதம் 15உக்குள் அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்றோம்.

யோக சிகோப நிஷத்—தமிழ் பொழிப்புரை.

தவத்திரு திரிமூர்த்தி சுவாமிகள்.
(ஸ்ரீ சாது சுவாமிகள் ஆஸ்ரமம், பழநி.)

முன் (ம 1 இ 10 ப 144) தொடர்ச்சி.

(அ...கை) அந்தப் பிரணவ வடிவ ஆன்மமந்திரப் பயிற்சியாலேயே சுத்தப் பிரம்மத்தினடைவைக் கூறல்.

மேலானது, பெரியது, சிறந்தது, சத்தியமானது, சத்து சித்து ஆனந்த இலக்கணமுள்ளது. அளவை கடந்தது, இதுவெனக் காட்டொணாதது, மனோவாக்குகளுக் கெட்டாதது, தூய்மையானது, நுட்பமானது, உருவின்றியது, மாறுபாடற்றது, நிறைந்தது, முடிவற்றது, பிரிவற்றது உவமையற்றது, நோயற்றது, என இவ்வாருய ஆன்ம மந்திரத்தை இடையருது பயில்வதால் பரம்பொருள் ஒளிருகின்றது. (17)

(அ...கை) பரதத்துவ விளக்கத்தில் உளதாகுங் குறிகளைக் கூறல்.

பிரம்மாவே! அந்தப் பரதத்துவத்தை அறிபவனுக் குண்டாகுங் குறிகளையும் சித்தியுண்டாம் வழிகளையும் என்னிடங் கேட்பாயாக. இடையருது ஆன்மதத்துவத்தை அகத்துப் பயில்கின்ற யோகிக்கு தீபச்சுடர், சந்திரன், ஆகாயத் தோற்றம், மின்னல், நக்ஷத்திரமுதலிய ஒளிகள் நுண்ணிய வுருப்புடன் அகத்து, காணப்பெறுகின்றன. மற்றும் அவனுக்கு அணிமா முதலிய ஐஸ்வர்யம் விரைவில் உண்டாகின்றது. (19)

(அ...கை) நாதத்தைப் பயில்பவனது மகிமையைக் கூறல்

நாதப் பயிற்சியினுஞ் சிறந்த மந்திரமில்லை. தனதான்மாவைக் காட்டிலும் சிறந்த தெய்வமில்லை. அனுபவத்தினுஞ் சிறந்த பூஜை இல்லை (திருப்தி) அமைதியினுஞ் சிறந்த சுகமில்லை. ஆகையால் பேரின்பத்தை அடைய விரும்பிய புருடனால் என்றும் முயற்சியுடன் இந்த வித்தையானது மறைத்துக் காக்கத்தக்கது. (21)

(அ....கை) தெய்வத்தினிடத்தும், குருவினிடத்தும் பக்தியுள்ள ஒருவனுக்கே பரதத்துவ ஞானமுண்டாமெனக் கூறல்.

என்னிடம் பக்தியுள்ளவனே இந்தப் பரதத்துவத்தை அறிந்து செய்யத் தக்கன செய்து இன்பவுருவம் எய்துகின்றான். இது நிச்சயம்

தேவதையினிடத்துச் சிறந்த பக்தி எவனுக்குளதோ, அவ்விதமே குருவினிடத்துச் சிறந்தபக்தி எவனுக்குளதோ, அந்த மகாத்மாவிற்கே இதில் கூறியுள்ள நுட்பமான பொருள்கள் விளக்கமெய்துகின்றன (22)

இரண்டாவது அத்தியாயம் முடிந்தது.

மூன்றாவது அத்தியாயம்.

(அ....கை) நாதப் பிரம்மத்திலிருந்து, பரா, பஸ்யந்தி மத்திமா, வைகரி முதலிய வாக்குகள் தோன்றும் முறையைக் கூறல்.

யாதொன்று வணங்குதற்குறிய சித்வடிவமோ, அணிமாதி அஷ்ட சித்திகளின் காரணம் யாதோ அதுவே அழிவற்ற நாதப்பிரம்மமாம். அது பரம்பொருளெனவும், சப்தப்பிரம்மமெனவும் சொல்லப்படுகிறது குண்டலி சக்தி மூலாதாரத்தில் இருப்பது. அதிலிருந்து பிந்து சக்தி உண்டானது அதுவே பராவாக்கெனப் படுவது. அந்தப் பராவாக் வடிவ பிந்துவில் விதையிலிருந்து சூக்குமமான முளைதோன்றுவது போல், நாதம் உண்டாகிறது. அந்த நாதத்திலிருந்து பஸ்யந்தி வாக் குண்டாகிறது. யோகிகள் உலகை எதனால் காண்கின்றனரோ, அதனால் அதை பஸ்யந்தி யெனக்கூறுகின்றனர். அந்தப் பஸ்யந்தி என்ற வாக் கிலிருந்து மத்திமா என்ற வாக்கானது உண்டாகின்றது. அது இதயத் தில் இடியை யொத்த வொலியுடன் தோற்ற முறுவதாகும். அந்த இதயத்திலுண்டான வொலியானது மத்திமா என்று சொல்லப்படு கிறது. பிரம்மாவே! மீண்டும் அந்த மத்திமா என்ற வாக்கானது ஒலி வடிவாய்ப் பிராணனோடு வாயினிடத்து வெளிப்படுவதால் வைகரி என்ற பெயருள்ளதாகின்றது. (5)

(அ....கை) அந்த வைகரி வாக்கினது விரிவைக் கூறல்,

கிளைகளில் இலைகள் தோன்றுவது போல், கழுத்து, உதடு, பல் அண்ண முதலிய இடங்களைத்தாக்கி வெளிப்படுவதால் அகார முதல் க்ஷகாராந்தமாயுள்ள எழுத்துக்கள் தெளிவாய்த் தோன்றுகின்றன. அவைகள் முறையே எழுத்துக்கள், பதங்கள், சொற்கள், மந்திரங்கள் வேதங்கள், சாத்திரங்கள் பதினெண்புராணங்கள், காவியங்கள்; பல் வேறுமொழிகள், ஏழுஸ்வரங்கள், கதைகள் முதலியயாவும் நாதப்பிரம் மத்திலிருந்து வெளிப்பட்டன. ஆகையால் இந்தநாதப்பிரம்மமே வாக் தெய்வமாகிய ஸரஸ்வதி எனப்படுகிருள். எல்லாச் சீவர்களின் இதய மலரில் ஒலிவடிவாய் ஸரஸ்வதி வசிக்கின்ருள். இதயத்திலுள்ள வாக் வாதினியாகிய ஸரஸ்வதி நெருப்புடன் கூடிய பிராணனல் ஏவப்பட்ட வளாய் மெல்ல மெல்ல ஓரெழுத்து, இரண்டெழுத்து, மூன்றெழுத்து பதங்கள், வாக்கியங்கள் எனக் கூறும்படியாக வெளிப்படுகின்ருள். (9)

(அ...கை) அந்த வைகரி வாக்கை உபாசிப்பவனுக்கு வாக்சித்தி உண்டாமெனக்கூறல்—

யாதொரு யோகிபுருடன் தனதான்மாவிலுள்ள வைகரி வாக் தேவதையை உபாசித்து அறிவனோ, அவன் சொல்வன்மையைப் பெறுகின்றான் மற்றும் அத்தேவதையின் திருவருளால் வேத சாஸ்திர புராணங்களைத்தானே செய்யும் ஆற்றலுள்ளவன் ஆகின்றான். (10)

(அ...கை) இவற்றிற்கெல்லாம் மூலமாயுள்ளது அழிவற்ற பரம் பொருளெனக்கூறல்.

நல்ல விரதமுள்ளவனே! பிந்து, நாதம், சந்திரன், சூரியன், அக்கினி, வாயுக்கள், இந்திரியங்கள் எல்லாம் எதனிடத்தில் ஒடுங்குகின்றனவோ, பிராணன் எங்கு ஒடுங்குகின்றதோ, மனம் எங்கு ஒடுங்குகின்றதோ, அது அழிவற்ற பரம்பொருள் என்று அறிக, எதை அடைந்தபின் வேறொன்றின் வேட்கையறுமோ, எதனின் மேலானது இல்லையோ, எதில் நிலைத்தபின் பெருந்துன்பத்தினாலும் அலைக்கப்படுவதில்லையோ, அது பெரும்பொருளென அறியவும். யோகத்தைப் பயில்வதால் சித்தம் வெளியினின்றும் உட்திரும்பியதாய் யாண்டு ஒடுங்குகின்றதோ, அது ஆன்மா எனப்படுகிறது. நல்ல மனதால் யாதொரு ஆன்மாவைக்கண்டு அதனிடத்திலேயே இன்புறுகின்றானோ, அதுவே பரதத்துவமென அறியவும். அப்பரதத்துவமே முதலிறுதியற்ற சுகவடிவமாம். பொறிகளைக் கடந்து நிற்பது யாதோ, அது ஞானவடிவ புத்தியால் அறியப்படுகின்றது. இந்த ஆன்மா அழியும் பொருள் அழியாப் பொருள்களைக் கடந்து நிற்பதாய் அழிவற்றதெனச் சொல்லப்படுகிறது, எல்லாவுயிர்ப் பகுதிகளும் அழிவுறுவன, எல்லாவற்றிலும் ஊடுருவித் தொடர்ந்து நிற்பதான ஆன்மா அழிவற்றதெனக் கண்டு தெளிக. அத்தகைய பரசிவம்-அழிவற்றது, பரம்பொருள், சிறப்பின்றியது, குறியற்றது, இலக்கணமில்லது, இலக்கியமாகாதது, ஊகிக்கொணாதது, உவமையற்றது, எல்லையற்றது, வேறு பிரிக்கொணாதது, சிந்திக்கொணாதது, மிகத் தூய்மையானது, பூதம் யாவும் இருக்குமிடமானது, எதற்குமிடமாகாதது, நோயிலாதது, அளவைக் கடந்தது, இதுவெனச் சுட்டொ-ணாதது, முன்னிலையற்றது, பொறிவழி கடந்திருப்பது, பருமனாகாதது, அணுத்திரனில்லது, குறில் நெடிலற்றது, பிறப்பில்லது, வெளிப்படக் காணொணாதது, ஊருடன் உருவமற்றது, கண்ணுடன் செவியிலாதது, பிரம்மப் பொருளென அறியத்தக்கது, மற்றும் எல்லாமறிவது, எங்குஞ் சென்றிருப்பது, சாந்தமே வடிவாய் எல்லாச் சீவர்களின் இதயத்தில் நிலைபெற்றுள்ளது, குருவருள் பெற்றவர்க்கு எளிதிலறியப் படுவது, தீமனச் சிரார்க்கு அறியவே படாதது, கலையிலாதது, குண-மிலாதது, சாந்தமானது, மாறுபாடற்றது, பற்றுக்கோடிலாதது, ஒட்டாதது, தீங்கிளையாதது, நிலைபெற்ற மலைபோன்றது, இருந்தபடியே இருப்பது பரம்பொருள் என அறியவும். (21)

(அ...கை) அந்தச் சப்தப்பிரம்மத்தை பக்தியாலும் பாவனையாலும் பயில்வதால் பரப்பிரம்மத்தினடைவுண்டா மெனக் கூறல்.

ஜோதிகளுக்கெல்லாம் அது ஜோதியானது, இருட்டின் முடிவில் நிலைபெற்றுள்ளது, உள்பொருள் இல்பொருள்களின் நீங்கியது, பாவனை ஒன்றிற்கே அறியவுறுவது, பக்தியுடன் உள்ளொடுங்கிய மனதால் அறிபடும் பரதத்துவமானது, ஜீவர்கள் வேற்றுடலை அடைவதற்கு எங்ஙனம் பாவனையே காரணமாகின்றதோ, அங்ஙனமே இந்தப் பரதத்துவத்தை அடையும் விஷயத்திலும் பாவனை ஒன்றே முக்கியமானதென்று அறிக. விடையத்தைச் சிந்திக்கின்றவனது மனம் எங்ஙனம் விடையத்திலேயே இன்புறுகின்றதோ' அங்ஙனமே என்னையே சிந்திக்கின்றவனது சித்தம் என்னிடத்திலேயே ஒடுங்குகின்றது. பரசிவமாகும் இயல்பும், எல்லாவற்றையும் அறியும் ஆற்றலும், எல்லாவற்றையுங் குறைவின்றிச் செய்யும் வலிமையும், அளவிறந்த வாற்றலோடிருத்தலும், என்னை இடையறாது தியானிப்பதால் உளதாகின்றது. (25)

மூன்றாவது அத்தியாயம் முடிந்தது.

நான்காவது அத்தியாயம்.

(அ....கை) ஜீவனது தோற்றம் பொய்யெனக் கூறல்.

பரமான்மா ஒன்றாய் நிறைவாய் எல்லாமாயிருத்தலின், சித்வடிவ ஆன்மாவிற்கு வேற்றுமை ஓரிடத்தும் பொருந்தாது என்றறிக. எங்ஙனம் கயிற்றில் பாம்பின் தோற்றம் மித்தையாயுளதோ, அங்ஙனமே நிறைபொருளான சித்தில் ஜீவனது தோற்றமும் மித்தையே என்று அறிக, கயிற்றை அறியாத பொழுது எங்ஙனம் கயிறே சர்ப்பமாகத் தோன்றியதோ, அங்ஙனம் சித்தை அறியாத காலத்தில் ஒப்பற்ற சித்தே உலகமாய்த் தோற்றமுறுகின்றது. (2)

(அ ...கை) உலகனைத்தும் பிரம்மவடிவே எனக்கூறல்.

முதற்பொருளாய் எல்லாவற்றினுந் தொடர்ந்திருப்பதாயுள்ள பிரம்மத்தினும், உலகு வேறாயிருத்தல் பொருந்தாது, ஆகையால் எல்லாவுலகும் பிரம்மமாகவே உளது. அற்பமும் அன்னியமென்பதில்லை எல்லாம் ஆன்மாவே என்று உறுதிமொழி கூறியிருத்தலால் நிறைந்தது குறைந்தது என்ற வேற்றுமையுணர்வு மித்தையென்பது அறிக. இங்ஙனம் பரதத்துவத்தின் ஞானமுண்டாகில் வேற்றுமைக்குச்சிறிது மிடமில்லையாகின்றது. பரதத்துவமான பிரம்மத்திலிருந்து எல்லாப் பூதங்களும் உண்டாயின. (தொடரும்)

சைவசித்தாந்தம்.

சிவஞான போதம்.

அருட்டிரு. திருநீ சண்முகானந்த சுவாமிகள்.
(மதுரை.)

முன் (ம 1 இ 10 ப 137) தொடர்ச்சி

அவையே தானேயாய் என்பதனை, அவையே ஆய், தானே ஆய், அவையே தானே ஆய், என இரட்டுற மொழிந்து பொருள் கூறியவாறுணர்க. ஆய்—புரிய—நிற்கும். எனக் கூட்டுக. எனவே இறைவன் உயிர்களைப் போல் காரணத்தாற் செய்யாமல் சங்கற்பமாத் திரத்தாற் செய்வனென்பது பெறப்பட்டது. ஆணையின் என்பது சிங்க நோக்காய் இருவினையின் என்பதனோடும், நீக்கமின்றி நிற்கும் என்பதனோடும் இயைந்து பொருள் தந்து நின்றது அங்ஙன் இயை யுங்கால் இன்னுருபு இருவினையென்பதனோடு ஏதுப்பொருட்கண்ணும் நீக்கமின்றி என்பதனோடு நீக்கப் பொருட்கண்ணும் வந்தது அன்றே- அசை. இதற்கு அகாதியே இவ்வாறு நிற்கும் எனினும் பொருந்தும் "**ஆணையின் இருவினையின்**" எனவே தனது சிற்சத்தி துணைக்காரண மெனவும், இருவினையும் அதன்வழித்தாய துணைக்காரணமெனவும், அவ்விருவினைக்கும் பற்றுக்கோடு முதற்காரண மெனவும், "**போக்கு வரவு புரிய**" எனவே ஒடுங்கியின் மீளவுளதாங்கால் இருவினைக்கேற்ப பல்வேறு வகைப்பட்டு விரியுமெனவும் போந்தவாறுணர்ந்துகொள்க.

இனி இச்சூத்திரத்தால் இறைவன் கலப்பினால் உடலின் உயிர் போல அவ்வான்மாக்களேயாய் ஒன்றாயும், பொருட்டன்மையால் கண்ணின் அருக்கன் போலிருத்தலால் உயிருக்கு வேறாயும், உயிர்க் குயிராகியிருக்குந் தன்மையால் கண்ணொளியின் ஆன்மபோதம்போல உடனாயும் உளன் எனக்கண்டு கொள்க. இக்கருத்துப் பின்செவ்வனே விளக்கப்படும். இதுபற்றியே "**உலகெலாமாகி வேறாயுடனுமாய்**" எனச் சித்தியாருங் கூறிற்று.

தோற்றம், நிலை, இறுதி, மறைப்பு, அருள் என்னும் ஐந்த னுள் ஒன்றற்குவினைமுதலாதல் இறைவனுக்கு இலக்கணம் எனல் பொருந்துமேனும் ஏனையவற்றின் ஐயப்பாடு நீக்குதற்கு ஐந்தொழிற் கும் வினை முதலாதலும் கொள்க. இவற்றுள் தோற்றமும் இறுதியும் வெளிப்படை. நிலையென்பது தோன்றிய உலகம் ஒடுங்குங்காறும் நிலைபெறுதல், மறைப்பும் அருளும் முறையே பந்தமும் வீடும் எனக் கொள்க. அற்றேல் அங்ஙனமாக, நிலைத்தொழில் முதல்வன் காரியம்

என்றதென்னே? உலகத்தைச் சங்கரிப்பார் வேறு உளராயினன்றே அவரைத் தடுத்து உலகத்தை நிலைபெறுத்தல் வேண்டும். இறைவன் சங்கரியாது நிற்குமளவும் வேறு சங்கரிப்பாரின்மையின் நிலைத்தொழில் முதல்வன் காரியம் அன்று எனின்:— தண்ணீர்க் குடம் நிலைபெற்றிருத்தல் அதனையெடுத்துச் செல்வோனது முயற்சியினால் அமையுமாறு போல தோன்றிய வுலகம் ஒடுங்குமளவும் நிலைபெற்றிருத்தலும் இறைவனது முயற்சியானே யமையுமாறுணர்க.

அம்முயற்சியாவது தோன்றிய வுலகம் ஒடுங்குங்காறும் நிலைபெற்றிருக்குக, என்னும் இறைவனது ஆணையாகிய சங்கற்பமேயாம். அற்றேல் அஃதங்ஙனமாக: அநாதியாய மூலமலத்தின் காரியமே மறைப்பாகலின் அது இறைவனாற் செய்யப்படுங் காரியமென்பதெங்ஙன் எனின்:—இறைவன் முற்றறிவுடைமையின் உயிர்கள் படுந்துன்பமுழுமையும் உணர்ந்தோனாகியும்; முடிவிலாற்றலுடைமையான் உயிர்களனைத்தையும் ஒருங்கே வீடுபேறடைவிக்க வல்லனாகியும்; சிவன் சங்கரன் முதலிய நாமங்களால் அறியப்படுவதாயும், விருப்பு வெறுப்பின்றி எல்லாவுயிர்கள் மாட்டும் ஒப்ப நிகழ்வதாயும் உள்ள பெருங்கருணையுடையனாகியும் இருப்பினும், உயிர்களால் அநாதிமுதல் ஈட்டப்பட்டுப் பல்வேறு வகைப்பட்ட துன்பங்களையெல்லாம் உண்டுபண்ணும் வினையின் வலியினையும், எல்லாப் பெருங் கேட்டிற்கும் மூலமாகிய சகசமலத்தினையும் கெடுத்து எல்லாவுயிர்களையும் ஒருங்கே வீடுபேறடை வியாமைக்குக் காரணம்:— அங்கையில் ஏந்தியதீயின் சூட்டை நிகழவொட்டாது தனக்கு மாறாகிய மந்திர முச்சரிக் குங்காலும் தடுத்து நிற்குங்குளிகை போல, இறைவனைச் சிறப்பியல் பாலுணரும் மெய்யுணர்வு தோன்றுங்காலும் அவனது பெருங்கருணை உயிர்கள் மாட்டு விளங்காவண்ணம் தடுத்து நிற்கும் உயிர்க்குற்றமாகிய அந்தந்த மலசத்தியின் வழி நின்று அவற்றையியக்குவதாகிய அவனது சங்கற்பமே ஈண்டு மறைப்பெனப்படும். 'பந்தமும் வீடும் ஆயினருக்கு' எனவரும் மணிவாசகத்துட் பந்தம் என்றதும ஈண்டுக் கூறிய மறைப்பினையே என்பதுங் கண்டு கொள்க.

அற்றேல், மேலைச் சூத்திரத்துள் ஆசிரியர் மூவினைமை என்றும் ஈண்டுப் போக்கு வரவு புரிய என்றும் கூறினர். ஆகமங்களுள்ளும் இறைவனுக்கு இலயம் போகம், அதிகாரம் எனவும் ஆரணி, ஜநநி, ரோதயித்திரியெனவும் முத்தொழில்பற்றி மூன்றவத்தையும் மூன்று சத்தியுமே கூறப்பட்டன. ஆகலின் மறைப்பும் அருளுங் கூட்டி ஐந்தொழில் என்றது என்னையெனின் :— மறைப்பாவது வினைநுகர்ச்சியின் கண் அதன் வழிநின்று நடத்துவதாகிய இறைவனது சங்கற்பமேயென முன்னர்க் கூறிப் போந்தமையின் அம்மறைப்பு நிலையின் கண்ணும், அருளாவது மீட்சி யின்றி இலயித்தலே யாகலின் அவ்வருள் சங்காரத்தின் கண்ணும் அடங்குமென்பதுபற்றி முத்தொழிலெனத் தொகுத்துக் கூறப்படும். இனி

மறைப்பினுள்ளே, தோற்றம், நிலை, இறுதி யென்னும் மூன்றும் அடங்குதல் பற்றிப் "பந்தம் வீடுதரும் பரமன்" எனப் பெரிய புராணத்துள் இரண்டு தொழிலாக வோதப்படுதலையும் உணர்ந்து கொள்க. விரித்துக்கூறுங்கால் ஐந்தொழிலென்றே எல்லாவாகமங்களும் கூறும். இனியிச்சூத்திரத்துள் அவையே தானேயாய் என்றும், ஆணையின் இருவினையின் என்றும், போக்கு வரவு புரிய என்றும் ஆணையின் நீக்கமின்றி நிற்கும் என்றும் நான்கு அதிகரணங்கள் உள்ளன.

2-ம் சூ. முதல் அதிகரணம்.

அவையே தானேயாய் என்பது. என்சொல்லிய வாறோவெனின், மேலைச்சூத்திரத்தின் முழுவதும் சங்கரிக்குஞ் சங்காரகாரணன் யாவனோ அவனே ஐந்தொழிலுஞ் செய்வோனாய் உலகிற்கு முதற் கடவுள் என்பது போந்தமையின், அம்முதற் கடவுளே ஆன்மாக்கள் பலவுமாய்த்தானேயாய் ஆன்மாக்கள் பலவுந்தானேயாய் நிற்பன் என இரட்டுறமொழிதல் என்னும் உத்தியாற்கூறியவாறு.

அற்றேல் முதல்வன் ஐந்தொழில் புரிதல் தன்பொருட்டோ, அன்றிப் பிறர்பொருட்டோ, வீணோ? தன் பொருட்டெனில் வரம்பிலின்பமுடையானுக்கு இத்தொழிலால் வரக்கடவதாகிய பயன்சிறிதுமின்று. உயிர்கள் பொருட்டெனின், உயிர்களும் முதல்வனும் ஏகான்மவாதிகள் கொள்ளும் பொன்னும் பணியும்போல் அபேதமா? மாத்துவர் கொள்ளும் இருளும் ஒளியும் போற் பேதமா? பாஞ்சராத்திரிகள் கொள்ளும் சொல்லும் பொருளும் போற் பேதாபேதமா? அபேதமாயின் அத்தொழில் தன்பொருட்டேயாகும். பேதமாயின் அவ்வான்மாக்களின் பொருட்கு ஐந்தொழில் செய்தற்கு எவ்வாற்றானும் இயைபில்லை. பேதாபேதமாயின் சமணர் கூறும் அநேகாந்தவாதமாம். ஈண்டுப்பேதாபேதம் என்றது, சொல்லும் பொருளும் வேறேயாயினும் சொற்றோன்றவும் பொருள் தோன்றல்பற்றி அபேதமென்பார் மதத்தையுடன் பட்டுப் பேதாபேதமென்னுந் துணையேயன்றி ஒருபொருட்டு இருதன்மையுங் கோடல் பொருந்தாமையின் அதுபோலியேயாம். இங்ஙனமாகவே பிறர் பொருட்டென்பது பொருந்தாது. அவ்வாறன்றி வீண்எனில் பித்தர் செய்யுந்தொழிலோடொக்கும். இங்ஙனமாகலின் ஐந்தொழில் செய்வோன் முதல்வன் என்றல் இலக்கண வழுவாம் என்று ஆசங்கை நிகழ்ந்தவழி அதனை நீக்கி வேறாயினுங்கலப்பினால் அவ்வுயிர்களேயாம் சம்பந்தமுடைமையின் உயிர்களின் பொருட்டே இறைவன் ஐந்தொழில் செய்வன் ஆகலான், அப்பொருளாகிய பயனையுடையதாய் வந்தது முதலதிகரணமாகலின் இலக்கண வழுவாமாறில்லை யென்றுணர்க. இக்கருத்துப் பற்றியன்றே. "முன்னவன் விளையாட்டென்று மொழிதலுமாம்" எனச்சித்தியாரும் "ஏற்றவிவை யரனருளின் திருவிளையாட்டாக இயம்புவர்கள்" எனச்சிவப்பிரகாசமும், "காத்தும் படைத்தும் கரந்

தும் விளையாடி'' என மணிவாசகமும் கூறியதூஉம் என்க. இன்றுஞ் சாத்தனுக்கு ஐங்கலப்பாரம் பொறுத்தல் விளையாட்டென்பதுபோல அத்துணையெளிதிற் செய்யும் ஆற்றலுடைமையே ஈண்டு விளையாட்டாகலின் வீண்டொழில் என்றல் சிறிதும் பொருந்தாமையறிக.

இனி ஒரு விடயத்தைக் காணுமிடத்து ஆன்மபோதம், கண்ணொளியெனத்தான்என வேறின்றி உடனாய் நின்று காணுமாறுபோல, இறைவன் ஐந்தொழில் செய்யுங்கால் உயிர்களின் உடனாய் நின்று செய்வன் என புனர்உற்பவம் வருமாறுணர்த்தலையும் பயக்கும் பொருட்டு அவையே ;தானேயாய் எனக்கூறியதூஉம் என்க. மற்றும் தத்துவமசி, அகம்பிரமாஸ்மி, அயமாத்மாபிரமம், பிரக்ஞானம்பிரமம் என்னும் மாவாக்கியங்களின் பொருளே ஈண்டுத்தொகுத்தோதினர் ஆகலின் சடம் சேதனமாகிய பிரபஞ்சம் இரண்டனுள் சேதனப் பிரபஞ்சத்தையே சுட்டி "அவையே தானேயாய்'' என்றார் எனவுணர்க. இக்கருத்துப்பற்றியே, பயன் ஓத்துள் "அவனே தானேயாகிய அந்நெறி'' என அநுவதித்துச் சுட்டியதுங்கண்டு கொள்க.

அற்றேல் அஃதங்ஙனமாக, முதல்வன் ஒன்றாயும், உடனாயும், வேறாயும் நிற்பன் என்பதற்குப் பிரமாணம் என்னையெனின்:—

வேதத்துள் அத்துவிதம் என்ற சொல்லே இம்மூன்றற்கும் பிரமாணமாம். எங்ஙனெனின்:—துவிதம் என்பது இரண்டென்னும் பொருளையுடையது. அ. என்னும் எழுத்து அப்பிரகாசம் என்றவிடத்து வருமொழிப்பொருளின் மறுதலையினையும், அப்பிராமணன் என்றவிடத்து வருமொழிப்பொருளின் அன்மையினையும் உணர்த்தி நிற்கும். அவற்றுள் ஈண்டு இன்மைப்பொருள்கொண்டு இரண்டில்லையெனப் பொருள்கொள்ளின், இரண்டின்மை ஒன்றன் கண்ணேயாமாகலின் ஒன்றெனப் பொருள் படுமாகையாலும், மறுதலைப்பொருள்கொண்டு இரண்டற்கு மறுதலையாகிய ஒன்றெனப் பொருள்கொள்ளின், மறுதலைஇருபொருட் கண்ணதாகலின் அதன் மறுதலையாகிய இரண்டாவதுண்மையும் பெறப்படும். படவே இறைப்பொருள் ஒன்றன்றென்னுங் கருத்தெனப்பொருள்படும். ஆகையாலும், அன்மைப் பொருள்கொண்டு இரண்டல்லவெனப்பொருள் கொள்ளின், இருபொருள்களும் வேறன்றி உடனாய் நிற்குமெனப் பொருள்படுமாகையாலும், இம் மூன்றனுள்ளும் இன்மைப்பொருள் சிறந்தமையின் அது கொண்டு ஒன்றெனக் கோடலே பொருத்த முடைத்தெனின் தானே தன்னை ஒன்றெனக் கருதுதல் வேண்டாமையின் அங்ஙனம் கருதும் பொருள் வேறொன்று உண்டென்பது பெறப்படுமாகலானும், அத்துவிதம் என்ற மொழிதானே பிறிது காரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்தி நிற்கும் என்பது போந்தவாறு கண்டுகொள்க. எனவே அன்மைப் பொருள்பற்றி வேறன்றி உடனாம் என்பது பெறப்படவே பொருட்டன்மையால் பேதமென்பதும், கலப்பினால் அபேதமென்பதும் தாமே வந்தமையும் என்பது கருத்து.

அற்றேல் இங்ஙனம் மூவகையாகக்கூறுதல் அநேகாந்தவாதமன்றோவெனின்:— கூறுதும், உயிரானது நரம்பு முதலியவற்றாற் பிணிக்கப்படும் உடம்பினையும் ஐம்பொறி முதலிய கருவிகளையும் ஏற்று நின்று சாத்தாகொற்றாவென உடற்கிட்ட பெயராற் பிறர் அழைத்த விடத்துத்தான் என்னையென முன்வந்து நிற்றலானும், இருவர் கைகோத்து நின்றுழி அவருள் அழைக்கப்பட்டோனே யன்றி மற்றையோன் என்னையென்றல் உலகத்தின்மையானும், உடம்பின் பெயரால் அழைத்தவழி உயிர்என்னையென்றல் உலகத்தின்மையானும், உடம்பின் பெயரால் அழைத்தவழி உயிர்என்னையென்றற்குக்காரணம் பிறிதோராற்றாற் பெறப்படாமையின், அவ்வுயிரானது உடம்பெனவும் தானெனவும் வேற்றுமையின்றி அபேதமாய் நிற்றல் அருத்தா பத்தியளவையானே பெறப்பட்டதுபோல முதல்வன் உயிர்களின் அபேதமாய் ஒட்டி நிற்போனும். உயிரும் உடம்பும் மேற்கூறியவாறு ஒட்டியவழியும், உயிர் உடம்பாகாது உடம்பு உயிராகாது. அவ்வாறாயினும் உயிர் உடம்பாயும் அதனின் வேறாயும் நிற்கும். உடம்பு அங்ஙன் நில்லாது. அதுபோல, முதல்வனும் உயிரும் ஒட்டிய வழியும் முதல்வன் உயிராகான் உயிர் முதல்வனாகாது. அவ்வாறாயினும் முதல்வன் உயிராயும் அதனின் வேறாயும் நிற்பன் உயிர் அங்ஙனம் நில்லாது இதுகாறுங் கூறியதுகொண்டு அவையேயாதல் வலியுறுத்தப்பட்டவாறுணர்ந்து கொள்க.

அற்றேல் அஃதங்ஙனமாக, வேதத்துள் அத்துவிதம் என்றதூஉம்அன்றி ஏகமேயெனவுங் கூறுதலின் வேறு பொருள் படாமையின் அதற்கு மறுதலையாய் உயிர்களோடு ஒட்டி நின்பன் எனக்கூறுதல் பொருந்தாதன்றோவெனின்:-அச்சொற்குத் தாற்பரியங்கூறுதும்:- வேதம் ஒன்றென்பதற்குப் பொருள் ஒன்றேயாம் வேறு பொருள் படாது, என்னை, பதிப்பொருள் ஒன்றே இரண்டில்லையென்பதே அதன் பொருளாம். ஒன்றென்று சொல்லுகின்ற பசு அப்பதிப்பொருளின் வேறேயாம். அற்றேல் பதியும் சேதனமாக உயிரும் சேதனமாக உயிரைப்பசுவென்பது என்னையெனின்:- பாசத்தோடு கட்டுற்று நின்றமையாற் பசுவெனப்பட்டது, இங்ஙன் வேற்றுமை கூறில் பிரமம் இல்லையாயின் ஒரு பொருளும் இல்லை என்னும் சுருதிக்குத்தாற்பரியம் என்னையெனின்:—அகரவுயிர் இல்லையாயின் அக்கரங்களில்லையாம் என்னும் முறைமைபற்றி சுருதியானது பிரமம் இல்லையாயின் ஒருபொருளும இல்லையென்று கூறுகின்றது. இதனானே அக்கரங்கட்கு அகரவுயிர் இன்றியமையாமைப் பொருட்டாதல்போல எப்பொருட்கும் பிரமம் இன்றியமையாமைப்பொருட்டு என்பதும் கண்டுகொள்க. இதுகாறுங்கூறிய வாற்றாற்றானேயாதல் வலியுறுத்தப்பட்டது.

(தொடரும்)

செய்தித் திரட்டு.

பழநி தவத்திரு சாதுமாமுனிவரரது ஐந்தாவ தாண்டின் நினைவு நாள் (குருபூசை விழா) மன்மத-ஐப்பசி 24-ம் நாள் வியாழன் அன்று கொண்டாடப் பெற்றது காலை மணி 7-முதல் 10-வரை இசைவிருந்து நிகழ்ந்தன. 10-மணிக்கு மகாபிஷேகமும்' அலங்கார நைவேத்திய சோடச உபசாரங்களும், 1-மணிக்கு அடியார்களுக்கு மாகேஸ்வர பூசையும், ஏழைகளுக்கு அன்னம் அளித்தலும். மாலை 5-மணிக்கு தவத்திரு. குக. சதாசிவ அடிகளார் தலைமையில் பல அறிஞர்களால் சொற்பொழிவுகளும், இரவு 8-மணிக்கு ஸ்ரீ சாது மாமுனிவரரின் திருவுருப்படத் திருவீதியுலாவும், நடைபெற்றன. அவ்வமயம் குளிக்கரை திரு. K. P காளிதாஸ் குழுவினரால் நாதஸ்வர கச்சேரியும், தேவார திருப்புகழ் பாராயணமும் நிகழ்ந்தன

12—11—1955-ல் சிதம்பரம் ஸ்ரீ பொன்னம்பல சுவாமிகள் மடாலயத்தில் ஷை சுவாமிகளுக்கு நந்தன ஐப்பசி 26-ம் நாள் சனிக்கிழமை குருபூசை நடைபெற்றது. ஏழைகட்கு உணவு அளித்தலும் அடியார்கட்கு மாகேஸ்வர பூசையும், கோவிலூர் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் முன்னிலையில் நடைபெற்றது.

கரூர், இரங்கனுதம்பேட்டை திருஞானசம்பந்தர் அருள் நெறி மன்ற முதலாண்டு விழா 6—9—55-அன்று மாலை 5-மணிக்கு சங்கேந்தி தவத்திரு குக, சதாசிவ அடிகள்ார் தலைமையில் நடைபெற்றது, பழநி திரு. சிங்காரவேல் அடிகள், காஞ்சிபுரம் திரு. இராமலிங்க அடிகள், கரூர் திரு. சு. ப அருணசலம் அவர்கள், திருமுருக குக ஸ்ரீ கிருபானந்தவாரியாரவர்கள், கரூர் திரு, சப்கலெக்டர் திரு மருதப்பா அவர்கள் ஆகிய இவர்கள் முறையே "சற்புத்திர மார்க்கம்" "நடராஜ வடிவம்" 'சமய நெறி" "அருச்சுனன் தவநிலை" "அன்பு நெறி" என்ற தலைப்பில் இரவு 12-மணி வரை பேசினர்கள். பின் தலைவரவர்கள் முன் பேசிய விடயங்களைத் திரட்டி அழகாக முடிப்புரை கூறினர்கள், பின் வந்திருந்த அனைவர்கட்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று செயலாளர் S. P. கந்தசாமி அவர்கள் நன்றி கூறலுடன் சபை இனிதே நிறைவேறியது.

ஓம்.

தமிழ்நாட்டுத் துறவிகள் சங்கம்

பதினொன்றாவது மாநாடும்

மாநாடு குறித்த

முன்னறிவிப்புச் சொற்பொழிவுகளும்.

பேரன்புடையீர்,

மன்மத ஆண்டு கார்த்திகைத் திங்கள் 12-ம் நாள் (28—11—55) திங்கட்கிழமை காலை மணி 7-முதல் பகல் 1-மணி வரை மாநாடும் 9, 10, 11, வெள்ளி, சனி, ஞாயிறு (25, 26, 27—11—55) இம் மூன்று நாட்களிலும், மாநாடு குறித்த முன்னறிவிப்புச் சொற்பொழிவு களும், திருவண்ணாமலை ஸ்ரீ அண்ணாமலையார் கோவில் சத்தி விலாச சபா மண்டபத்தில் காலை 9-மணி முதல் 12-மணி வரை நடைபெறும். எனவே இதனைக் கண்ணுறும் துறவிகளும், அன்பர் களும், அவ்வமயம் வந்திருந்து மாநாட்டைச் சிறப்புற நடாத்தி வைத்தும் சமயம் போற்றும் சான்றோர் பலரின் அறிய சொற்பொழிவு களைக் கேட்டும் இன்புறுமாறு வேண்டுகின்றோம்.

குறிப்பு:—நிகழ்ச்சி நிரல் அண்மையில் வெளிவரும். நன்கொடை அனுப்பும் அன்பர்கள் "துறவி" நிலையத்திற்கே அனுப்பவும்

20—11—55-முதல் 29—11—55-வரை திருவண்ணாமலை ஸ்ரீ அண்ணாமலையாருக்கு கார்த்திகை தீப தரிசன பிரம்மோற் சவம் நடைபெறும். 23—11—55-முதல் 28—11—55-வரை மாலையில் சத்திவிலாச சபா மண்டபத்தில் சமயச் சொற் பொழிவுகள் நிகழும் அன்பர்கள் வருக.

REGED. No. M. 6630.

அச்சுரிமை: ந வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணுமலை

ஆசிரியரும், வெளியிடுபவரும்: சுவாமி சொருபானந்தா, கீழ்ப்பாலூர்.